**Starting time 11.27 A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 109/2011**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 29.08.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வெற்றி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**3. 1-**ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: 21.04.2004 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் ஜெயக்குமாருக்கு ஒதுக்கப்பட்ட D அட்டவணை சொத்தை 3-ம் பிரதிவாதிக்கு விற்கும் வரையிலும் ஜெயக்குமார்தான் அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால், ஆமாம். அம்மம்பாளையத்திலிருந்து காட்டுக்கோட்டைக்கு செல்லும் தார்ரோடானது கிழமேலாக செல்கிறது என்றால், ஆமாம். அந்த தார்ரோட்டிலிருந்து வடக்கு நோக்கி அணைக்கட்டுராயன் கோவிலுக்கு ஒரு தார்ரோடு பிரிந்து செல்கிறது என்றால், ஆமாம். அணைக்கட்டுராயன் கோவிலிருந்து மேற்குநோக்கி ஒரு மண்ரோடு பிரிந்து செல்கிறது என்றால், ஆமாம். அந்த பாதை மீண்டும் தெற்கு நோக்கி சென்று மேற்கு நோக்கி திரும்புகிறது என்றால், ஆமாம். ஜெயக்குமார் அந்த பாதையின் வழியாகத்தான் தன் நிலத்திற்கு சென்றுவந்திருந்தார் என்றால், ஆமாம்.

4. எனக்கு செய்து கொடுத்த பரிவர்த்தனைப் பத்திரத்திலும், 21.04.2004 தேதியிட்ட

பாகப்பிரிவினைப் பத்திரத்திலும் அந்த பாதை குறித்து காட்டப்பட்டிருந்தது என்றால், ஆமாம். ஜெயக்குமாருக்கு பாத்தியப்பட்ட புல எண் 88/1D யில் உள்ள கிணற்றிலிருந்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் நான் எடுப்பதை தடுக்கக்கூடாது என்று கேட்டுதான் இ.ம.வ. எண் 454/2011-ஐ தாக்கல் செய்திருந்தேன் என்றால், ஆமாம். அந்த மனு விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், ஆமாம். அந்த மனு உத்தரவின் பேரில் உயர் நீதிமன்றத்தில் C.R.P. No. 63/2012 மற்றும் M.P. No. 1/2012-யும் நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால், ஆமாம். அந்த மனுவும் எனக்கு எதிராக தள்ளுபடியாகிவிட்டது என்றால், ஆமாம்.

5. புல எண் 88/1D-யில் உள்ள கிணற்றிலும், மின் மோட்டாரிலும் எனக்கு எந்த பாத்தியமும், உரிமையும் இல்லை என்றால், சரியல்ல, இருக்கிறது. நான் எப்பொழுதுமே அந்த கிணற்றில் தண்ணீர் எடுத்ததில்லை என்றாலும், பிரதிவாதியை மிரட்டி அந்த கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமையை பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அணைக்கட்டுராயன் கோவிலிருந்து பிரிந்து செல்லும் பாதை வழியாகத்தான் பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றால், ஆமாம். நான் அந்த பாதையை அழிக்க முயற்சித்ததால் ஜெயக்குமார் என்மீது அ.வ.எண் 123/2011 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால், ஆமாம். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்து இடத்தை பார்வையிட்டார் என்றால், இல்லை. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது நானும், என் தகப்பனாரும் உடன் இருந்தோம் என்றால், இல்லை.

6. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 30.03.2011 மற்றும் 01.04.2011 ஆகிய தேதிகளில் பிரதிவாதிகள் என்னுடைய அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இடையூறு ஏற்படுத்தியாகவும் நான் கூறியிருப்பதும் பொய் என்றாலும், அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், சரியல்ல. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும்

பொய்யானது சட்டத்திற்கு முரணானது என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.5 முதல் 17 வரையான ஆவணங்கள் தாவா 1வது இன சொத்திற்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால், சரியல்ல. புல எண் 88/1D-ல் உள்ள மின் இணைப்பு எண் 451 என்றாலும், ராஜேந்திரன் எனக்கு எழுதிக் கொடுத்த புல எண் 88/1G-ல் உள்ள கிணற்றின் மின் இணைப்பு எண் 15 என்றால், சரிதான். மேற்படி சங்கதியை மறைத்து புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றின் மின் இணைப்பு எண் 451-ல் உள்ள கிணற்றில் எனக்கு பாகம் இருப்பதாக பொய் வழக்காடுகிறேன் என்றால், சரியல்ல. புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றிலோ, மின் இணைப்பிலோ எனக்கு எந்த உரிமையும், பாத்தியமும் இல்லை என்றாலும், பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

1-ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>** நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 2-ம் பிரதிவாதிக்கு எதிராக நீதிமன்ற கட்டணம் செலுத்தி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால், ஆமாம். சார் பதிவாளர் சட்டப்படி அவருக்குண்டான அதிகாரத்தை பயன்படுத்தி அவரிடம் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை பதிவு செய்யலாம் என்றாலும், அதை தடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை என்றாலும், சரியல்ல. 2-ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோராததால் அவரைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

Ending Time: 11.44 A.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.